1973 நவம்பர் 26]

Report on milk market

* 416 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Market Research Corporation of India has submitted its report to the State Government about the Milk Market in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, அவ்வித அறிக்கை ஆண்டுதோறும் அனுப்பப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆண்டுதோறும் அனுப்பப்படுகிற அறிக்கையல்ல. நம்முடைய பால்வள வாரியம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த அறிக்கை அகில இந்திய விற்பனை ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப் பட்டுள்ளது.

பள்ளப்பட்டிப் பகுதிக்கு பால் வழங்கல்.

*417 **வின.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரவாக்குறிச்சி ஒன்றியம், பள்ளப்பட்டி பேரூராட்சி மன்றப் பகுதியில் பால் வினியோகத்தை அதிகரிக்க தனியார் துறை யிலோ, அரசுத் துறையிலோ பால்பண்ணை ஒன்றைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

@ 419–420-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த அரவக்குறிச்சி ஒன்றியம் பள்ளபட்டியிலே பேரூராட்சி மன்றப் பகுதியிலே கோடை காலத்திலேயும் காற்று காலத்திலேயும் பால் என்ற பெயரால் தண்ணீர்தான் கிடைக்கிறது. அங்கே பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். அங்கே நல்ல பால் கிடைக்கக்கூடிய முறையில் ஏதாவது ஒரு திட்டத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பால்பண்ணை அங்கே ஏற்படுத்துவது இயலாது என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. பள்ளப்பட்டி பகுதியிலே பால் தேவை நாளொன்றுக்கு 1,000 லிட்டர்கள் ஆகும். அங்கே ஏற்கனவே அரவைக்குறிச்சி கூட்டுறவு பால் வள சங்கம் ஒன்று இயங்கி வந்தது. அது தற்போது செயல் படவில்லை. அதற்கு உயிரூட்டுவதற்காக முயற்சியெடுத்துக் கொள்ள தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது, அப்படியில்லையென்றால் அங்கேயிருப்பவர்கள் புதிய சங்கம் ஏற்படுத்த முன்வந்தால் அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள பால் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

கதர்-கிராமப் பொருட்காட்சிகள்.

* 418 வினா.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கதர்-கிராமத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு எல்லா நகரங்களிலும் கண்காட்சி நடத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) சென்னை அரசினர் தோட்டத்தில் நடைபெற்ற கதர்-கிராமத் தொழில் கண்காட்சியில் விற்பனையான பொருட்களின் மதிப்பு எவ்வளவு ? அதன் மூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) ரூ. 1,60,999.98 மதிப்புள்ள கதர்-கிராமத்தொழில் உற்பத்திப் பொருட்கள் விற்கப்பட்டதில் ரூ. 24,427.56 ஆதாயம் கிடைத்தது. இத்துடன் விற்பனை நிலையங்களில் பலநாட்களாகத் தேங்கிக் கிடந்த அழுக்கடைந்த கதர் துணிகள் குறைந்த விலையில் ரூ. 62,238.92-க்கு விற்கப்பட்டன.